## மூன்றாம் கூடுதல் மாவட்ட/அமர்வு நீதிமன்றம், சேலம்

**முன்னிலை – திரு.வே.புகழேந்தி, இளநிலைச் சட்டம்,**

**மாவட்ட நீதிபதி**

**2026–ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 12–ஆம் நாள் புதன்கிழமை**

**திருவள்ளுவர் ஆண்டு 2057 ஆடித் திங்கள் 27–ஆம் நாள்**

**முதலேற்பு வழக்கு எண்.411/2019–ல்**

**வழக்கிடை விண்ணப்ப எண்.07/2026**

**தீபக் பிரசன்னா** **... மனுதாரர்/பிரதிவாதி**

**–எதிர்–**

**சரவணன்** **... எதிர்மனுதாரர்/வாதி.**

III rd ADJ Court, Salem

இந்த மனு இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரருக்காக வழக்குரைஞர் **திரு.S.டிட்டோபிரபு** அவர்களும் எதிர்மனுதாரருக்காக வழக்குரைஞர் **திரு.B.செந்தில்குமார்** அவர்களும் தோன்றி எடுத்துரைத்த வாதங்களை கேட்டும் வழக்குக் கோப்புகளை பரிசீலித்தும் இந் நாள்வரை நிலுவையில் இருந்து வந்த இந்த மனுவில் இந்த நீதிமன்றம் இன்று ஆணை பிறப்பிக்கிறது.

### ஆணையுரை

### முகவுரை

விவாதத்திற்காக உள்ள வழக்கை பிரதிவாதி தரப்பு சாட்சியத்திற்காக மீண்டும் திறக்கக் கோரி உரிமையியல் நடைமுறைத் தொகுப்புச் சட்டத்தின் 151-ஆம் பிரிவின்கீழ் இந்த மனு தாக்கல்செய்யப்பட்டுள்ளது.

### மனுவின் சுருக்கம்

01. எதிர்மனுதாரர்/வாதி மனுதாரர்/பிரதிவாதியிடமிருந்து 16,00,000/- உரூபாயை வசூலிக்க முதலேற்பு வழக்கைத் தொடுத்துள்ளார். பிரதிவாதி தரப்பு சாட்சியத்தைப் பதிவுசெய்வதற்கு 15.06.2026-ஆம் தேதியன்று

வழக்கெடுப்பு இருந்தது.அன்று மனுதாரர்/பிரதிவாதிக்கு வயிற்றுக் கோளாறு ஏற்பட்டதால் நீதிமன்றத்தில் தோன்றி சாட்சியம் அளிக்க முடியவில்லை. மனுதாரர்/பிரதிவாதி சாட்சியம் அளிக்காததால் அன்று மனுதாரர்/பிரதிவாதி தரப்பு சாட்சியம் நீதிமன்றத்தால் முடிக்கப்பட்டது. மனுதாரரின் தவறுகை வேண்டுமென்றோ அலட்சியத்தாலோ ஏற்பட்டதல்ல. மனுதாரர்/பிரதிவாதி தனது எதிர்வாதத்தை நிரூபிக்க சாட்சியமளிப்பது அவசியமாக இருக்கிறது. ஆகையால், இந்த மனுவை அனுமதித்து பிரதிவாதி தரப்பு சாட்சியத்தை மீண்டும் திறந்து ஆணையிட வேண்டும். இல்லையேல் மனுதாரர்/ பிரதிவாதிக்கு ஈடுசெய்ய முடியாத இழப்பும் இன்னலும் ஏற்படும்.

**எதிருரையின் சுருக்கம்**

02. அசல், வட்டி என மொத்தம் 21,80,734/- உரூபாய் கடன் நிலுவையை வசூலிக்க எதிர்மனுதாரர்/வாதி வழக்கிட்டுள்ள நிலையில் 16,00,000/- உரூபாய்க்கு வழக்கிட்டுள்ளதாக மனுதாரர்/பிரதிவாதி பொய் யுரைத்துள்ளார். பிரதிவாதி தரப்பு சாட்சியத்தை பதிவுசெய்வதற்காக நீதிமன்றம் பல ஒத்திவைப்புகள் வழங்கியும் மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் சாட்சியம் அளிக்க முன்வராததால்தான் 15.06.2026-ஆம் தேதியன்று அவர் தரப்பு சாட்சியத்தை நீதிமன்றம் முடித்து ஆணையிட்டது. வாதி தரப்பு சாட்சியத்தை மீண்டும் திறந்து சான்றாளரை குறுக்குவிசாரணை செய்ய அழைக்க வேண்டும் என்று மனுதாரர்/பிரதிவாதி தாக்கல்செய்த வழக்கிடை விண்ணப்ப எண்கள் 5/26, 6/26 ஆகியன ஏற்கனவே தள்ளுபடிச் செய்யப் பட்டுவிட்டன. அந்த நடவடிக்கையிலும் மனுதாரர்/பிரதிவாதி தனக்கு உடல்நிலை சரியில்லை என்று காட்டக்கூடிய ஆவணங்கள் எதையும்

III rd ADJ Court, Salem

தாக்கல்செய்யவில்லை. வழக்கிடை விண்ணப்ப எண்கள் 5/26, 6/26 ஆகியவற்றில் 13.03.2026 ஆம் தேதியன்று பிறப்பிக்கப்பட்ட ஆணையை எதிர்த்து சீராய்வு மனு தாக்கல்செய்யப்போவதாக சொன்ன மனுதாரர் அவ்வாறு தாக்கல்செய்தததாக தெரியவில்லை. வழக்கு நடவடிக்கையை காலதாமதப்படுத்தவும் எதிர்மனுதாரர்/வாதியை தொந்தரவு செய்யவும் மனுதாரர் இதுபோன்ற மனுக்களை தாக்கல்செய்துவருகிறார். ஆகையால், இந்த மனுவைத் தள்ளுபடிச் செய்ய வேண்டும்.

### தீர்வுகாண வேண்டிய விவாதக்கூறுகள்

03. **இம் மனு அனுமதிக்கத்தக்கதா?**

### தீர்முடிவு

**04.** இரு தரப்பு வாதங்களும் கேட்கப்பட்டன. வழக்குக் கோப்புகள் ஓர்வுசெய்யப்பட்டன. 01.12.2025-ஆம் தேதியன்று வாதி தரப்பு சாட்சியப் பதிவு முடிக்கப்பட்டு பிரதிவாதி தரப்பு சாட்சியத்திற்காக வழக்கு ஒத்தி - வைக்கப்பட்டது. 16.02.2026-ஆம் தேதியன்று வாதி தரப்பு 01-ஆம் சான்றாளரை மீண்டும் அழைக்கக் கோரி மனுதாரர்/பிரதிவாதி தாக்கல்செய்த வழக்கிடை விண்ணப்ப எண்கள் 5/26, 6/26 ஆகிய இரண்டும் 13.03.2026 ஆம் தேதியன்று தள்ளுபடிச் செய்யப்பட்டன. அதிலிருந்து பிரதிவாதி தரப்பு சாட்சியத்திற்காக 6 முறை வழக்கு ஒத்திவைக்கப்பட்டது. 15.06.2026-ஆம் தேதியன்று மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் சட்சியம் அளிக்கத் தயாராக இல்லாததால் அன்று பிரதிவாதி தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டு 22.06.2026 ஆம் தேதியன்றுக்கு விவாதத்திற்காக வழக்கு ஒத்திவைக்கப்பட்ட நிலையில் மனுதாரர் இந்த மனுவைத் தாக்கல்செய்துள்ளார்.

III rd ADJ Court, Salem

05. ஏற்கனவே போதிய வாய்ப்பு வழங்கிய பிறகுதான் பிரதிவாதி தரப்பு சாட்சியத்தை முடித்துவைத்து இந் நீதிமன்றம் ஆணையிட்டது. 15.06.2026-ஆம் தேதியன்று மனுதாரர்/பிரதிவாதிக்கு வயிற்றுக் கோளாறு ஏற்பட்டதாகவும் அதனால் தோன்ற முடியவில்லை என்றும் சாட்சியம் அளிக்க முடியவில்லை என்றும் மனுதாரர் இந்த மனுவிற்காக கூறியுள்ள காரணம் ஏற்புடையதா? இல்லையா? என்பது ஒரு புறம் இருக்க வழக்குகள் அனைத்தும் தகுதிப்பாட்டின்பேரில் முடிவுசெய்ய வேண்டும் என்ற நன்கு நிறுவப்பட்ட முன்தீர்ப்பு நெறியை கவனத்தில் வைத்து மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் சாட்சியம் அளிப்பதற்கு ஒரு வாய்ப்பு வழங்குவது நீதியின் நலனுக்கு உகந்தது என்று இந் நீதிமன்றம் கருதுகிறது. இந்த மனுவுடன் யார்யார் சான்றாளர்களாக விசாரிக்கப்பட உள்ளனர் என்ற பட்டியல் உள்ளதையும் இந் நீதிமன்றம் கவனத்தில்கொள்கிறது.

06. இந்த மனுவை அனுமதிப்பதால் காலதாமதத்தால் ஏற்பட்ட இன்னலை தவிர வேறெந்த அநீதியும் எதிர்மனுதாரர்/வாதிக்கு விளையாது. காலதாமதத்தால் ஏற்பட்ட இன்னலை செலவுத்தொகை செலுத்த ஆணை யிடுவதன் மூலம் ஈடுசெய்ய முடியும்.

## இறுதிமுடிவு

07. இறுதியாக, மனுதாரர்/பிரதிவாதி 17.08.2026-ஆம் நாளுக்குள் 1,000/- உருபாயை எதிர்மனுதாரர்/வாதிக்கு செலவுத்தொகையாக கொடுக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் இந்த மனு அனுமதிக்கப்படுகிறது. தவறினால் இந்த மனு தானாகவே தள்ளுபடியாகிவிடும்.

III rd ADJ Court, Salem

இந்த ஆணையுரை என்னால் சுருக்கெழுத்துத் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சுச் செய்யப்பட்டு என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2026—ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 12—ஆம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

PUGAZHENTHI V Digitally signed by PUGAZHENTHI V
Date: 2026.08.12 18:34:18 +0530

மூன்றாம் கூடுதல் மாவட்ட /அமர்வு நீதிபதி,
சேலம்.

III rd ADJ Court, Salem

இணைப்பு – இல்லை